பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 13 ஜூலகஜ் 1 இதழ் 196
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29-8-84

## "வடபகுதியின் தற்போதைய நிலைமை: பார்த்தசாரதி மூலம் இந்திராவுக்கு விளக்கினேன்"

(கொழும்பு)

"இலங்கையின் தற்போதைய நிலைமை, வடபகுதி நிலைமை, சர்வகட்சி மகாநாட்டு நிலைமை ஆகியன குறித்து திரு. பார்த்தசாரதி மூலம் இந்திரா காந்திக்கு விளக்கியுள்ளதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள், இளைஞர்கள் கைது ஆகியன குறித்தும் திரு. பார்த்தசாரதி மூலம் திருமதி இந்திரா காந்திக்கு விளக்கியதாகவும் சென்னையில் இருந்து நேற்றுக் கொழும்பு திரும்பிய திரு. அமிர்தலிங்கம் கூறினார்

### 'அமிர்' தகவல்

தமிழகத் தலைவர்களையும் சந்தித்து வடபகுதி நிலைமை பற்றி விளக்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச

(8ம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதம்பற்றி மக்கள் தகவல் தர முன்வருவதில்லை!

## இதனாலேயே இளைஞர்கள் கைதாகின்றனர் என்கிறார் 'லலித்'

(கொழும்பு)

"பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து தக்க தகவல்கள் கிடைக்காததன் காரணமாகவே காலி முகாமில் தமிழ் இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று தமது அமைச்சில் நடத்திய உயர்மட்ட மகாநாட்டில் தெரிவித்தார்.

அம்மகாநாட்டில் திரு. அத்துலத்முதலி மேலும் தெரிவித்ததாவது:-

"வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். 124 இளைஞர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

"இவர்களும் விசாரணையின் பின்னர் நிரபராதிகளாகக் காணப்பட்டால் விடுதலை செய்யப்படுவார்கள்" என்றார்.

இம்மகாநாட்டில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயகோன், யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

[இ-வெ]

## விடுதலை செய்யப்பட்ட 32 இளைஞர்கள் நேற்று யாழ். வந்தனர்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, காலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 32பேர் விடுதலைசெய்யப்பட்டு நேற்று நண்பகல் யாழ். தேவி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்

[8-ம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் ஜீப் கடத்தப்பட்டது

[அலுவலக நிருபர்]

இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்ட பொலிஸ் ஜீப்வண்டி ஒன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் ஜீப்வண்டி முற்றிலும் சேதமடைந்துள்ளது. இந்த ஜீப்வண்டி கல்லுண்டாய் வெளியில் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

யாழ். நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப் வண்டி (31 ஸ்ரீ 1175) யாழ்ப்பாணம் பொலிசாரால் பாவிக்கப்பட்டுவந்தது.

நேற்றுக்காலை யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவிலுடையில் சின்னக்கடைக்குச் சென்று இறைச்சி வாங்குவதற்காக குறிப்பிட்ட ஜீப் வண்டியில் சென்றிருந்ததாகவும், இனந்தெரியாத இரு இளைஞர்கள் துப்பாக்கி முனையில் ஜீப் வண்டியின் சாவியை அபகரித்துக்கொண்டு ஜீப் வண்டியை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜீப்வண்டி செல்லும் பொழுது மேலும் இருவர் ஜீப் வண்டிக்குள் ஏறிக்கொண்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## ஈரான் விமானம் கடத்தப்பட்டது

தெஹ்ரான், ஆக. 28

இருநூற்றுக்கும் அதிகமான பயணிகள் சென்ற ஈரானிய விமானமொன்று கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

## இலங்கையுடனான வர்த்தக உறவுகளை மறு பரிசீலனை செய்யவும்

### அரபு நாடுகளிடம் 'கல்வ் ரைம்ஸ்' பத்திரிகை கோரிக்கை

லண்டன், ஆக. 28

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண இஸ்ரேலின் உதவியை இலங்கை நாடியுள்ளதை அரபு நாடுகள் கண்டித்துள்ளன.

இலங்கையுடனான வர்த்தக உறவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு அரபுநாடுகளை ஆங்கிலப் பத்திரிகையான 'கல்வ் ரைம்ஸ்' கேட்டுள்ளது.

இலங்கைக்குப் பண உதவி செய்வது குறித்தும் இந்த நாடுகள் பரிசீலனை செய்ய

(8-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் அ. விஜயநாதன் 17 நாட்கள் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்

(8ம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கி அடகு நகைகள்

## பணம் செலுத்தி 6 மாதமாகியும் இன்னும் வழங்கப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகள், பணமும், வட்டியும் செலுத்தியும் ஆறு மாதத்திற்கு மேலாகியும் இன்னும் வழங்கப்படவில்லை.

விவசாயத்திற்காகவும், மற்றும் பல தேவைக்காகவும் பலர் அடகு வைத்துப் பணம் பெற்றிருந்தனர். அடகுகளை மீட்பதற்கு பணமும், வட்டியும் செலுத்திவிட்டனர்.

சிலர் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் இரவல் வாங்கி தங்கள் தேவைக்காக அடகு வைத்ததாக கூறப்படுகிறது.

தற்போதுள்ள சூழ்நிலையில், அடகு நகைககள்வழங்கப்படாதென்றும், கூடிய விரைவில் நகைகளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்

(8ம் பக்கம் பார்க்க)

## ரூ. 29,000 பணமே கொள்ளையிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளை அடிக்கப்பட்ட பணம் 29, 948 ரூபா 84 சதம் என மேற்படி சங்கத்தலைவர் திரு. சி. பொ. வ. மா க. முதலியார் தெரிவித்துள்ளார் அத்துடன் 8,56,740 ரூபா 56 சதம் கொண்டகாசோலையும் கொள்ளை அடிக்கப்பட்டதாக

(8ம் பக்கம் பார்க்க)

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் இரத்தாக்ஷி ஆண்டு ஆவணித் திங்கள் 13-ம் நாள் (29-8-84) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை வரும் துலாம் லக்கினம் கூடிய சுபவேளையில்

திருநிறை செல்வன்
டாக்டர்
குலேந்திரன்
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
சாந்தி
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி
ஆ. சிவரத்தினம்
மணமகனின் மைத்துனர்
பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.

திரு. திருமதி
சி. தியாகராஜா
உரிமையாளர்
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்
477, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

1485

# ரி விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேசன் (Pure) 4 மாதக் குட்டிகள் (கறுப்பு, மண்நிறம் கலப்பு) உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: 21, கண்டி வீதி, நாவற்குளி. 1461

பொது நிறுவனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் மத்திப மாகவும் மதிப்புள்ள சுற்றுட லில் வீதி முகப்புடன் சுண் டிக்குளியில் அமைந்துள்ள 1½ பரப்பு வெற்றுக் காணி விற்ப னைக்குண்டு. விளம்பர இல 1300 C/O ஈழநாடு யாழ்ப் பாணம். 1300

புளியங்கூடல் சந்தியில் 3 கடைகள் (நீர், மின்சார வசதி களுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. போசராஜா, புளியங்கூடல் சந்தி, வேலணை. 1476

நாயர்மார்கட்டுக்கு அருகில் 2 பரப்பு வீடு கட்டக் கூடிய தென்னங் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: Dr. K வாசவன், 14, இராணி வீதி, நல்லூர். 1468

## தேவை

நன்கு அனுபவமுள்ள வெல் டிங் கம்மாலை வேலை செய்யக் கூடியவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். நேரில் தொடர்பு கொள்ளவும், கமலா கராஜ் அன் இன்டஸ்ரீஸ், 53, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 1469

## தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை ஆனையிறவுக்கும், பளைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிடைக்க ஆவன செய்யவும். S.ஆறுமுகம், தச்ச கடம்பன், மாங்குளம். 1470

## சேவை

கோண்டாவிலில் இருந்து யாழ். பாடசாலைகளுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்பு: ஜெயமுகுந்தன், 53, அன்னசத் திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 23382. [1475]

## வெற்றுச் சாக்கு விற்பனை

இச்சங்கத்தில் 15,000 வெற் றுச் சாக்குகள் விற்பனை செய்வ தற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் யாவும் பதிவுத் தபாலில் இடதுபக்கமேல்மூலை யில் 'சாக்கு விற்பனை' எனக் குறிப்பிட்டு 10-9-84ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு முன் பாக தலைவர், கரைதுறைப் பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு, என்ற விலாசத் திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் ரூபா 250/- மீளப்பெறக்கூடிய வைப்பும் செய்யப்படல் வேண் டும்தெரிவுசெய்யப்படும் விண் ணப்பதாரர் கேள்விகிடைத்து மூன்று நாட்களுக்குள் பொரு ளைச் சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்துதல்வேண்டும். காரியாலய நாட்களில் வெற் றுச் சாக்கினை சங்கத்தில் பார்வையிடலாம். சங்கத் தில் ரூபா 15/-கட்டி கேள்விப் பத்திர படிவங்கள் பெற்று மனுப்பண்ணவேண்டும். சங்கப் படிவங்களல்லாதவற்றில்வரும் கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தலைவர்.
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.
24-8-84. 1464

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி, கண்டிவீதி, குருபவனத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமணி அருமைநாயகம் என்ப வரின் மரணசாதன மில்லா சொத்துக்கள் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } வழக்கு இலக்கம் 223/T

அருமைநாயகம் கைம் பெண் தங்கேஸ்வரி, "குருபவனம்" கண்டி வீதி, சாவகச்சேரி.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் சொத் துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற் கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத் தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவ ரேனும் 1984-ம் ஆண்டு புரட் டாதி மாதம் 26-ந் திகதி முற் பகல் 8-30 மணிக்கு இந் நீதி மன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின் னுறுதிக் கட்டளை ஏன் முற் றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத் தால் தேவைப்படுத்தப்படுகின் றீர். 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 17-ந் திகதி,

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆ. குணநாயகம்
பதிவாளர்.

தயாரித்தவர்கள்,
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்,
மனுதாரின் சட்டத்தரணிகள்.
1480

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

மணலியம் பதி அம்மன் ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் விசேட பூஜை ஆரா தனைகளுடன் முடிவடைந்தது.

ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ க.மு.ஜெகநாதக் குருக் கள் உற்சவத்தைநடாத்தினார்.

## சதுர்த்தி

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு ஆத்திப்புலம் அருள் மிகு சந் திரசேகர விநாயகராலய ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நாளை வியாழக் கிழமை சிறப் பாகக் கொண்டாடப்படவுள் ளது-

ஆலயப் பிரதம குரு பிரம் மஸ்ரீ க.மு.ஜெகநாதக் குருக் கள்இவ் உற்சவத்தை நடாத்தி வைப்பார். அன்றைய தினம் பஜனை' கூட்டுப்பிரார்த்தனை களும் இடம் பெறும்.

108, BROWN ROAD,
JAFFNA.

**A/L 86 பொது இரசாயனம்**

ஆரம்பம்: 31-8-84
வெள்ளி: 4-30 P. M.

ஆசிரியர்: சத்தீஸ்

புதன், வெள்ளி
4-30 P.M.
1479

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்:
**செல்வன் சு. உதயகுமார்**
(படம் வரைஞர், மகாவலி பொறியியல் நிர்மாண ஸ்தாபனம், கொழும்பு)

மணமகள்:
**செல்வி ந கமலாம்பிகை**

இடம்: மணமகள் இல்லம்
காலம்: 01-09-1984 சனிக்கிழமை
நேரம்: பகல் 12 00 மணி முதல் 1-00 மணி வரை

வரவேற்பு:
மணமகன் இல்லம் மாலை 4-00 மணி

அழைப்பு:

திருமதி
சரஸ்வதி சுப்பிரமணியம்,
7-ம் கட்டை,
சங்கானை.
(மணமகன் இல்லம்)

திரு. திருமதி
க. நவரத்தினம்,
(விஷக்கடி வைத்தியர்,
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(மணமகள் இல்லம்)

((1472)

## ஏல விற்பனை

ஏலவிற்பனை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

வெட்டுத்துண்டுகள் :-
(முறுக்கு) உருக்குச் சட்டங்கள்
வட்டவடிவான சட்டங்கள்
கோண இரும்பு
மற்றும் பாவித்த வளைகள் முதலியன

காங்கேசன்துறை லங்கா சிமெந்துத் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு உண்டு.

சித்திபெற்ற கேள்விதாரர் முழுத் தொகையின் 1/3 பகுதியை உடனடியாகச் செலுத்தி மிகுதிப் பணத்தை 24 மணித்தியாலத்திற்குள் செலுத்த வேண்டும்.

விற்பனை முடிந்து 5 நாட்களுக்குள் பொருட்களை அப் புறப்படுத்த வேண்டும். பொருட்களை பிரதி சனிக் கிழமைகளில் காலை 9 மணிக்கும் நண்பகல 12 மணிக் கும் இடையில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
**லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்**
1291

## களுவாஞ்சிக்குடி வங்கியில் கொள்ளை

[மட்டக்களப்பு]

களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக் கிளையில் நேற்று முன் தினம் இனம் தெரியாத 15 இளைஞர்களினால் 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபா பணமும், இரண்டு துப்பாக்கிகள், இரு பது தோட்டாக்கள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் பகல்12-45 மணிக்கு வங்கியில்புகுந்த இளை ஞர்கள் முகாமையாளரைப் பயமுறுத்தி இந்தக் கொள் ளையை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியில் உடனடியாக தடைகள் போடப்பட்டு பலத்தசோதனை கள் நடத்தப்பட்டது.

## நிறுத்திவைக்கப்பட்ட பல்கலைக்கழகப் பரீட்சைகள் அடுத்தமாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழ கத்தில் முன்பு ஒத்திவைக்கப் பட்ட கலைப்பீட, மருத்துவ பீட பரீட்சைகள் அடுத்த மாதம் முற்பகுதியில் நடத் தப்படவிருக்கின்றன.

செப்டம்பர் 12-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் இப் பரீட்சைகள் நடைபெறுமென பல்கலைகழகப் பதிவாளர் அறி விக்கின்றார்.

★ ★ **விற்றுத்தீர்க்கும் மலிவு விற்பனை** ★ ★

இப்பொழுது நடைபெறுகிறது

# பிரவுண்சன் ரேட் சென்ரர்

"கூட்டுறவுக் கட்டிடம்"
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
1404

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்:
**செல்வன் ஐ. லோகஞானம்**
(தபால் அதிபர், யாழ்ப்பாணம்)

மணமகள்:
**செல்வி வை. சந்திரபிரபா**
(உபதபால் அதிபர், யாழ் பல்கலைக்கழகம்)

இடம்:
திருநெல்வேலி சிவன்கோவில் மஹாமண்டபம்

காலம்:
31-08-1984 வெள்ளிக்கிழமை

நேரம்:
பிற்பகல் 2 00 மணி முதல் 3-30 மணி வரை

அழைப்பு:

திருமதி
இ. ஐயாத்துரை,
புலோப்பளை,
பளை.
(மணமகன் இல்லம்)

திருமதி
தெ. வைத்திலிங்கம்,
சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
(மணமகள் இல்லம்)

(1473)

# COMPUTER PROGRAMMING

A/L பரீட்சை பெறுபேறு உங்களை வந்து அடையுமுன்
நீங்கள் கொம்பியூட்டர் துறையில் சிறந்த பயிற்சியை
B. B. C. கொம்பியூட்டரில்
(இலங்கை, பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் பயன்படுத்தப்படும்)
பெற்றுவிட உங்களுக்கு ஒரு வாய்ப்பு
அதுமட்டுமல்ல
எமது உளச்சார்பு பரீட்சையில் விசேட சித்தியெய்தும்
முதல் ஐந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில்
(SCHOLARSHIP) வழங்கப்படும்.
மேலும் பல சலுகை கட்டணங்கள்

**BASIC — நான்கு மாதங்கள்**
(பாடநெறியும், செய்முறைப் பயிற்சியும்)
கட்டணம் 1400/-
உளச்சார்பு பரீட்சை 6-09-84 9-00 மணிக்கு
உளச்சார்பு பரீட்சை கட்டணம் 10/-

குறிப்பு:
எங்கள் வேண்டுதலின் பெயரில் முன்கூட்டியே உங்களது பெயர்களை உங்கள் கல்வி நிறுவனங்களில் பதிவு செய்தவர்கள் எம்முடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு:
**Comteck Computer Institute,**
(ஆஸ்பத்திரி வீதி - 3-ம் குறுக்குத்தெரு சந்திக்கு அருகாமையில்)
14, ST, PETERS LANE, JAFFNA.
T-Phone: 24355

# இந்திய விமான கடத்தல்காரருக்கு லாகூரில் துப்பாக்கி வழங்கப்பட்டதாம்

## இந்தியா குற்றச்சாட்டு; பாகிஸ்தான் மறுப்பு

**புதுடில்லி, ஆக. 28**

**இந்திய 'போயிங் 737' விமானம் கடந்த வியாழக்கிழமை சீக்கியத் தீவிரவாதிகளினல் டுபாய்க்குக் கடத்தப்பட்டபோது லாகூர் விமான நிலையத்தில் கடத்தல்காரர்களுக்கு துப்பாக்கி வழங்கப்பட்டுள்ளதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.**

இந்த விமானம் புதுடில்லியிலிருந்து ஜம்மு-காஷ்மீர் செல்லும் வழியில் சீக்கியத் தீவிரவாதிகள் தமது சமயச் சின்னமாக எடுத்துச் செல்லும் 'பிச்சுவாகத்தி'யைக் காட்டி விமானத்தைத் திசை திருப்பினர்.

விமானம் முதலில் லாகூரில் தரையிறங்கியபோது கடத்தல்காரர்கள் துப்பாக்கி வைத்திருந்தனராம்.

கடத்தல்காரர்களுக்கு லாகூர் விமான நிலையத்தில் வைத்து துப்பாக்கி வழங்கப்பட்டதாக விமானத்தை ஓட்டிச்சென்ற விமானிகளும், பயணிகளும் இந்தியா திரும்பியதும் தெரிவித்துள்ளனர். இந்தச் செய்தியை ஆதாரம்காட்டிக் கடத்தல்காரர்கள் ஆரம்பத்தில் துப்பாக்கி வைத்திருக்கவில்லையென்றும், அவர்களுக்கு லாகூர் விமான நிலையத்தில் துப்பாக்கி வழங்கப்பட்டிருக்கலாமென்றும் இந்தியாவின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய லோக்சபாவில் சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் குஜித் ஆலன்கான் பேசுகையில், ''கடத்தல்காரர்கள் ஆரம்பத்தில் துப்பாக்கி வைத்திருக்கவில்லை. லாகூரில்தான் அவர்கள் முதன்முதலாகத் துப்பாக்கியைக் காட்டியுள்ளார்கள். ஆயினும் இது தொடர்பாகச் சரியான முடிவினை அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை'' என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் இந்தக் கூற்றினைப் பாகிஸ்தான் நிராகரித்துள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தானிய அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், ''சீக்கியத் தீவிரவாதிகள் இந்திய விமானநிலைய அதிகாரிகளுக்கு லஞ்சம்கொடுத்துத் துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளார்கள். இதனை மறைப்பதற்காக இந்தியா பாகிஸ்தான்மீது குற்றம் சுமத்துகிறது. கடத்தல்காரர்களுக்கு லாகூர் விமான நிலையத்தில் துப்பாக்கி வழங்கப்பட்டது என்ற கூற்று உண்மைக்குப் புறம்பானதாகும். இந்தியாவின் இந்தக் கருத்து பாகிஸ்தானுக்கு மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது'' என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடத்தல் விமானம் லாகூர், கராச்சி விமான நிலையங்களில் தரித்து நிற்பதற்கும் இடம் கோரியபோது பாகிஸ்தான் இதற்கு மறுப்புத் தெரிவித்தமை தொடர்பாகவும் இந்தியா பாகிஸ்தான்மீது வெறுப்புக் கொண்டுள்ளதாம்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இந்திய-பாகிஸ்தான் உறவில் மேலும் விரிசல் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (சூ)

## தஞ்சை பெரியகோயில் திருத்தப்படும்

[சென்னை]

தஞ்சை பெரிய கோயிலைப் புதுப்பித்துச் செப்பனிடுவதற்கு இந்திய மத்திய அரசு முன்வந்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பாரத தொல்பொருளியல் ஆய்வுக் கழகம் மேற்கொண்டு வருகிறது. (சூ)

## ஓய்வூதியம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

குருநகர் இலங்கை வங்கிக் கிளையில் கடந்த வாரம்ஓய்வூதியம் சம்பளம் எடுக்கத்தவறியவர்களுக்கு நேற்று முன்தினம் ஓய்வூதியம், சம்பளம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை சில அதிபர்கள் வந்து பெற்றுக்கொண்டனர். ஓய்வூதியகாரர்களும் தங்கள் ஓய்வூதியத்தை பெற்றுக் கொண்டனர்.

வழக்கத்திலும் பார்க்க நேற்று வங்கி சிறிது தாமதமாக திறக்கப்பட்டது.

இன்று முதல் காலையில் ஒரு மணி நேரம் மட்டுமே வங்கி இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## அணிசேரா இயக்கத்தில் வல்லரசுகள் தலையீடு!

### இந்தியா யுகோஸ்லேவியா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 28

''அணிசேரா இயக்கத்தில் ஊடுருவல் செய்து இயக்கத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க சில வல்லரசு சக்திகள் முயற்சி செய்கின்றன'' என்று இந்தியாவும், யுகோஸ்லேவியாயும் குற்றம் சாட்டியுள்ளன

மூன்றுநாள் உத்தியோக விஜயத்தை மேற்கொண்டு இந்தியா வந்திருக்கும் யுகோஸ்லேவியா அதிபர் யூகனவேஜ் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நடத்திய முதல் சுற்றுப் பேச்சுக்களின் போது இருதலைவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

தற்போது காணப்படும் உலகப் பொருளாதார அமைப்பு, கைத்தொழில் நாடுகளுக்கு சாதகமானதாக அமைந்திருப்பதினுல் மூன்ரும் உலக நாடுகளும் இதில் நன்மை பெறும் வகையில் இந்த அமைப்பை மாற்றி அமைப்பது, அல்லது இதற்குச் சமமான பிராந்திய பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்குவது தொடர்பாகவும் இரு தலைவர்களும் பேச்சு நடத்தினுர்கள்.

யுகோஸ்லேவிய ஜனதிபதி இந்திய ஜனதிபதி திரு. ஜானி ஸெயில்சிங்குடன் இருதரப்பு உறவு, சர்வதேசப் பிரச்னைகள் ஈரான்-ஈராக் யுத்தம், மத்திய கிழக்கு விவகாரம், இந்துசமுத்திரத்தில் வல்லரசுகளின் நடமாட்டம் என்பன குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர். (சூ)

## வீடமைப்புத்திட்டம் வேலைகள் ஸ்தம்பிதம்

[கொழும்புத்துறை]

யாழ்.மாவட்டத்தில் பத்து லட்சம் வீடுகள் நிறுவும் திட்ட வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து இவ்வீடமைப்புக் கடனுக்காக வழங்கப்பட்ட காசோலைகளை மாற்றமுடியாமலுள்ளமையினுலேயே இந்தநிலையேற்பட்டுள்ளது.

தற்போது இம்மாவட்டத்தில் வங்கிகள் இயங்காமல் இருப்பதால் காசோலைகளை மாற்ற முடியாதுள்ளது. இவ்வேளையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடன் பணத்தைக் காசோலைகளாகவே வழங்கிவருகின்றது.

ஏற்கனவே இக் காசோலைகளை வங்கிகளில் வைப்பிலிட்டவர்களும் காசோலைகளுக்குரிய பணத்தைப் பெறமுடியாது அவதியுற்று வருகின்றனர். இதனுல் இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் உரிய காலத்தில் வீடமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளது

## அமைச்சர் மொஹமட் சவூதி அரேபியா பயணம்

[கொழும்பு]

போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச், மொஹமட் இரண்டுவார கால விஜயத்தை மேற்கொண்டு இன்று புதன்கிழமை சவூதிஅரேபியா பயணமாகிருர்,

ஹஜ்யாத்திரையின் பொருட்டு சவூதி அரேபியா செல்லும் அமைச்சர்: அங்குள்ள தலைவர்களுக்கு அரபு நாடுகள் தொடர்பான இலங்கையின் நிலைபற்றி விளக்கமளிப்பார்.

'இஸ்ரேலின் நலன்காக்கும் பிரிவு' இலங்கையில்அமைக்கப்பட்டபோதும், அரபுநாடுகள் தொடர்பான இலங்கையின் கொள்கைமாருது என்று அமைச்சர் சவூதி தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் டக்ளஸ் லியனகே அண்மையில் இஸ்ரேலில் தெரிவித்த கருத்துபற்றியும் அமைச்சர் சவூதி தலைவர்களுக்கு எடுத்துக்கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைத் தமிழருக்கு ஆதரவுகோரி உதக மண்டலத்தில் பாடசாலைகள் பகிஷ்கரிப்பு!

[சென்னை]

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு உதக மண்டலம் அரசின் கலைக் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் கல்லூரிக்குச் செல்லாது பகிஷ்கரித்தனர்.

இவர்கள் ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

உலக மண்டலத்தில் வேறு பல பாடசாலைகளுக்கும் மாணவர்கள் செல்லவில்லை. (சூ)


## அரிய சந்தர்ப்பம்

★ COMPUTER PROGRAMMING (BASIC, COBOL)
கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங்
ஆரம்பத்தில் இருந்து இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும்.

★ எலக்ரிக்கல் வயறிங் ★ எலக்ரிக்கல் வெல்டிங்
இரண்டு மாத செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும்.

★ மோட்டார் றீவைண்டிங்
சகல வித மின்சாரப் பொருட்கள் றீவைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சி அளிக்கப்படும்

★ எயர் கொண்டிசனிங்

★ HOTEL MANAGEMENT, FRENCH

பயிற்சிகள் ஆரம்பம் 05-09-1984

குறிப்பு : சனசமூக நிலையங்களினூடாகப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு சலுகை கட்டணங்களில் பயிற்சியளிக்கப்படும். விபரங்களுக்கு நேரில் அல்லது உமது சனசமூக நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.


## அச்சுவேலி தபால் நிலையத்தில் 4 தினங்கள் வேலை இல்லை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தபால் நிலையம் கடந்த சனிக்கிழமை சேதத்திற்குள்ளானதை தொடர்ந்து அங்கு தபால் அத்தியட்சகர் பகுதியினரால் இருப்பு எடுப்பு நடைபெற்றது. இதனுல் நான்கு தினங்களாக அங்கு வேலைகள் நடைபெறவில்லை

தபால் நிலையத்திற்கு சமீபத்தில் குண்டு ஒன்று வெடித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பதட்டநிலையின்பின் தபாலகமும் சேதமடைந்தது.

தபால் நிலைய உத்தியோகத்தர் ஒருவரும், தபால் ஊழியர் ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக மேலிடத்திற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் தபால் நிலையத்தை இயங்கச் செய்வதற்கு மேலிடம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தபால் நிலையம் இயங்காததினுல் அச்சுவேலிப் பகுதியில் உள்ள ஓய்வூதியக்காரர்கள் நேற்றுமுன்தினம் ஓய்வூதியப் பெறவில்லை இவர்களுக்கு 31ம் தேதிக்கு முன் ஓய்வூதியட வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## மணிவாக்கு

என் செயினும் என் பெறினும்
என்னிறைவா ஏழையன் யான்
நின்செயலென்றுன்னும்
நினைவு வரக் காண்பேனோ? — தாயுமானவர்

# நமது நோக்கு

## வெருட்டி மருட்டும் வித்தை

**வீடு** எரியும்போது வீண் வாதங்களில் ஈடுபட்டுக் காலங்கழிக்கும் மக்கட் போலிகளை இனங்காண்பது இந்நாட்டுக்கு இன்று அவசியமாகின்றது.

சந்தைபோல் அரசியலை விரித்தலும், முதலையும் மூர்க்கனும் போல் பிடித்ததை விடாத முரட்டுத்தனமும், இனமத வேறுபாடுகளுக்குத் தூபமிடும் தீமையும் இன்றைய தேசியப் பிரச்னை-ஏன்சர்வதேசப் பிரச்னை — என்று கொள்ளப்படும் தமிழர்பிரச்னைக்கு உதவா?

என்ன வகையிலும் நாட்டைக் குட்டிச்சுவராக்கும் இந்த நெடுங்காலநோயை குணப்படுத்தவேண்டுமென்றதிடம் ஜனதிபதி ஜெயவர்த்தனவிற்கு உண்டென்று தெரிகிறது.

ராணுவத்தீர்வுதான் அவருடைய அந்தரங்க முடிவென்று நினைக்குமளவிற்கு கொடுமைகள் கூடிவந்தபோதும், அரசியல் தீர்வில் அவர் நம்பிக்கை வைத்திருப்பதில் சந்தேகம் கொள்வது தர்மமாகாது.

இவ்விடயத்தில் பாரதம் உதவ முன்வந்த போதெல்லாம் அவர் அதனை உதாசீனம் செய்யவில்லை. இதற்கு மாறாக அவருடைய சகாக்கள் சிலர் அரசியல் தலைவர்கள் பலர் எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டபோதும் அவற்றையெல்லாம் அரசியல் தந்திரத்தால் சமாளித்து வருவது கண்கூடு.

குறிப்பாக தமிழ்நாட்டைத் தாக்கும் பிரசாரத்தில் இந்தியப் பத்திரிகைகள் 'இந்தியா ருடே', 'இந்தியன் எக்ஸ்பிறஸ்' உதவுதல்பத்திரிகை! உலகின் விபரீதம்; உலகப் பிரபலம் பெற்ற 'இந்து' அரசாங்கத்துக்கு சார்பான கருத்து வெளியிட்டால் அது 'அரசு சார்பான பத்திரிகையில் முதற்பக்கம்; மாறென்றால் வெருட்டிஅடிக்கும் வித்தை.

தமிழ்நாட்டுக்கு எதிரான துவேஷம் சிங்களமக்கள் மத்தியில் அதிகரித்து வருவது கண்கூடு. தாக்குண்ட தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் புகலிடம் பெறுவது இயற்கை. ஆனால் தீவிரவாதத்திற்கு தமிழ்நாடே தளமென்ற பரந்த அபிப்பிராயம் சிங்கள மக்கள் மத்தியில் பரவியிருக்கிறது. இது உண்மையா? தவறா? என்பது முக்கியமல்ல இதனை நம்ப வைக்கும் வழியில் நடந்த சம்பவங்கள் பல. இவையெல்லாம் தவிர்த்திருக்க வேண்டியவை.

நடப்பது ஒன்று; நடக்குமாப்போல் தெரிவது இன்னொன்று. கல்லாத பேர்கள் நல்லவர்கள், கற்றபோலிகள் தங்கள் விடயம் வெற்றி பெற அப்பாவி மக்களை வெருட்டி, மருட்டி, தம்வயப்படுத்தும் வல்லமையுடையவர்; இன்று நாட்டுக்கு உண்டான அபாயம் இவர்களாலேயே!

யாருடைய உதவியைப் பெற்றும் இந்தத் தீராத துன்பத்திற்கு முற்றுக் காணும் அவசரம் ஜனதிபதி ஜயவர்த்தனவிற்கு உண்டென்று நினைப்பது பகுத்தறிவுக்குடன்பாடானது.

தமது நாடு சீர்குலைந்து சிறுமைப்படுவதைத் தமது அரசியல் வாழ்வின் கடைசிக் கட்டத்தில் அவர் விரும்பமாட்டார். இதனைத் தீர்த்துவைக்கும் பணியில் எதிர்க்கட்சிகள் முட்டுக்கட்டை போட்டால் அது வியப்பல்ல: அவருடைய சகாக்கள் சக்கும் ஆலகாலத்திலிருந்து தப்பவேண்டுமானால் இந்துக்களின் முழுமுதற் கடவுளான பரமசிவனே பிறப்பெடுக்கவேண்டும்.

'தமிழர்களுக்கு சுயநிர்ணயம் அளித்தல் அபாயம்; அதனால் முற்காலத்தில் நடைபெற்ற சோழமன்னன் படையெடுப்புப் போன்று இந்துக்களின் தாக்குதலுக்கு நாடு பலியாகும்'; இத்தகைய பிரசாரம் பொறுப்பான தலைவர்களின் தூண்டுதலுக்குட்பட்டதென்றால் சிங்கள சமூகத்தின் நல்லெண்ணம் எவ்வாறு கிடைக்கும்?

**சிங்கள பௌத்தம் என்ற** பிரிவு இன்று ஆட்சியில் பெரும் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. சர்வகட்சி மகாநாட்டிலும், சர்வமத மன்றத்திலும் அதன் பிரதிநிதிகள் முக்கியமானவர்கள்.

இத்தகைய ஆதாரமற்ற கருத்துக்களைத் தகர்த்தெறிவது அவர்களின் பெருங்கடன்; அதற்கு முன்வருவாரா?

சிங்கள பௌத்தம்போல தமிழ் இந்து என்ற பிரிவு தமிழ்ச் சமூகத்தில் என்றும் இருந்ததில்லை அந்நியர் ஆட்சியில் மதமாற்றத்தைக் கண்டிக்கவேண்டிய கட்டத்தில் அத்தகைய வேறுபாடுகள் தோன்றியிருக்கலாம்.

அதேபோல் சமய சமரசத்துக்கு எடுத்துக்காட்டான இந்து மதம், அரசியலில் ஆதிக்கம் கொண்டு மத வெறியால் எந்த நாட்டையும் இடர்படுத்தினதாக வரலாறு கூறவில்லை. மத சார்பற்ற ஆட்சியையே அது ஆதரிப்பது.

'இறை உணர்வு ஒரு பேரொளி. நம் கண்கள் அதனைக் கண்டு தாங்க முடியாததால் அது பல்வேறு சமயங்களாக வடிவெடித்திருக்கின்றது' என்கிறார் பௌத்தத்தை ஆராய்ந்து படித்த டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்.

இந்து மதம்-ஆன்ம ஞான ஒளி, பௌத்தம்-சிறந்த கருணைத் திறம், கிறிஸ்துவம்-தெய்வீக அன்புக் காட்சி, இஸ்லாம் - இறையருள் தலைப்பாடு-இவை ஆன்மிக வாழ்வின் பல்வேறு கூறுகள் என்பது அவரின் முடிவு.

இந்துக்கள் என்ற துவேஷம் இந்தியாவிலும், தமிழர் என்பது தமிழகத்திலும் இன்று இங்குவாழும் தமிழ் மக்களுக்கு உண்டான அநீதிகள் ஏற்படுத்திய அச்சத்தின் விளைவாகும்.

### மலையகத் தமிழ்மக்கள்

# ஓரிடத்தில் தரித்து நிற்க வேண்டும்

ஓடிக் கொண்டே இருப்பதா ஓரிடத்தில் தரிப்பதா என்ற எனது முன்னையகட்டுரையில் மலையகத் தமிழ் மக்கள் இந்த நிலைப்பாட்டினிற்குத் தள்ளப்பட்டதற்கான அக, புற நிலை சம்பந்தப்பட்ட சில காரணிகளை குறிப்பிட்டிருந்தேன்.

இந்த சமூகம் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்க முடியாது. எங்காவது ஓரிடத்தில் தரித்து நிற்க வேண்டும். இது வரலாற்றுத் தேவை மாத்திரமன்றி நியதியுங்கூட. இந்நிலையில் இம் மக்கள் மத்தியில் நிலவும் மூவகையான கருத்துக்களை இங்கு நோக்குவது அவசியமாகின்றது.

1. இந்தியாவுக்குச் சென்று விடுதல்.
2. மத்தியமலைநாட்டிலேயே பாதுகாப்பைத் தேடிக் கொள்ளுதல்.
3. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு குடிபெயர்தல்.

### இந்தியாவுக்கே சென்று விடுதல்

இந்தியாவுக்கே சென்று விடுதல் என்றஎண்ணப் போக்கினை கொண்டவர்கள் மலையகத்தை பொறுத்தமட்டில் ஒருபெரும் எண்ணிக்கையாகும் இவர்கள் தங்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு இந்தியாவில் தான் உண்டு என எண்ணுகின்றார்கள். எப்படியாவது இந்தியாவுக்குச் சென்று விடுவோம் என்ற அபிலாசையுடன் உள்ளார்கள். தொடர்ச்சியாக இடம் பெற்று வந்துள்ள வன்செயல்கள் இவர்களின் எண்ணத்தினை மேலும் வலுவடையச்செய்துள்ளது. இம்மக்கள் இந்தியாவிற்குசென்று விடுவதிலேயே தமது முழுக்கவனத்தினையும் கொண்டுள்ளார்கள். இவ்வெண்ணம்கைகூடும் வரை வடக்குக் கிழக்கினைத் தஞ்சமடைந்தவர்களும் உண்டு.

### மத்திய மலைநாட்டிலேயே பாதுகாப்பைத் தேடிக் கொள்ளுதல்

இரண்டாம் பகுதியினர் தங்களுக்கான பாதுகாப்பை மத்திய மலைநாட்டிற்கு நகர்ந்து செல்வதன் மூலம் தேடிக் கொள்ளலாம் என்ற எண்ணக் கருத்தினை கொண்டவர்களாவர். இவர்களில் பெரும் பகுதியினர் மத்திய மலைநாட்டில் இருந்த வண்ணமே எப்படியாவது இந்தியாவுக்குச் சென்று விடுவோம் என்ற உணர்வுடன் உள்ளார்கள். அதே நேரத்தில் வடக்குக் கிழக்கு சமூக, பொருளாதார உறவுகள் தமக்கு ஒத்துவராத ஒன்றாகக் கருதுவதினையும் குறிப்பிடத்தக்கது. இவர்களில் பலர் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வந்து இங்கு உண்டான சமூக, பொருளாதார தள்ளு சக்திகளின் நிமித்தம் மீண்டும் திரும்பிச் சென்றவர்களும் உள்ளடங்குவர்.

மாத்தளை-இராஜலிங்கம்

### வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு குடிபெயர்தல்

மூன்றும் பகுதியினராகிய இம்மக்கள் தங்களுக்கான நிரந்தர பாதுகாப்பு வடக்கு, கிழக்கிலேயே அமைந்துள்ளது என எண்ணுகின்றார்கள். இவர்களில் ஒரு பெரும் பகுதியினர் இப்பிரதேசங்களை நாடி வந்து விட்ட அதே நேரத்தில் ஏனையோர் எப்படியாவது கூடிய விரைவில்இப்பிரதேசங்களுக்கு குடிபெயர்ந்து விடவேண்டும் என்ற உணர்வுடன் செயல்பட்டு வருகின்றார்கள். இவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒன்றரை இலட்சமாகும். இவர்கள் வவனியா, கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார் ஆகிய வட பிரதேச மாவட்டங்களிலும் மட்டக்களப்புப் பிர

(5-ம் பக்கம் பார்க்க)

# ஒரே இரத்தம்!

இலங்கையின் வெளிவிவகார உதவி அமைச்சர் திரு. ரைறென் பெர்னண்டோ சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுள் ஓடுவது எல்லாமே சிவப்பு இரத்தம் தான் என வெகு அழகாக மனிதத்தன்மையுடன் மிக்க பெருந்தன்மையுடன் சமீபத்தில் துணிந்து எடுத்துக்கூறியுள்ளதை மனித மனம்படைத்த எவராலும் பாராட்டாமலிருக்க முடியாது.

ஆனால் சமீபகாலங்களில் எவ்வளவு இரத்தம் இந்த மண்ணில் வீணாகத் ஓடிவிட்டது! ''தீயே உனக்கு தீராத பசியோ, நீ தின்ற உடல் எத்தனையோ?'' என்று கண்ணதாசன் கதறிப் பாடிய பாடல் நினைவுக்கு வருகிறது.

இந்த நாட்டில் என்னதான் நடக்கிறது என்பதை நாம் இங்கு அறிந்து கொள்வதை விட வெளிநாட்டவர்கள் பல வித கட்டுப்பாடுகளையும் மீறி நன்கு தெளிவாகவே அறிந்து கொண்டு விடுகின்றார்கள். அவர்களிடமிருந்தே நாம் நமது உண்மையான செய்திகளை அறியவேண்டியிருக்கிறது.

அமைதி, சமாதானம் இவற்றுக்கான பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் வாய் திறந்து பேசவே முடியாத நிலை மற்றொரு புறம். ''நீ வளர்ந்து மரமாகி நிழல் தரும் காலம் வரை தாய்மனதைக் காத்திருப்பேன் தங்க மகனே'' என்று தாலாட்டுபாடினர் கவிஞர் இந்த நிழல் தரும் மரங்களைக் காணாது இன்று கதறுகின்றார்கள் நம் தாய்மார்க்ள்.

''நெஞ்சும் மனமும் நெருப்பாக எரிகிறது'' என்றார் ஒரு தாய் பெற்றவயிறுகள் பசியோடு உண்ணாவிரதங்கள் இருக்கின்றன. மனித உரிமை

( 5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## கடவுச்சீட்டு: ஏன் இந்த பாரபட்சம்?

கடவுச் சீட்டுப் பெறுவதற்கு தமிழ் மக்களை மட்டும் பலவித ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு திணைக்களம் வற்புறுத்துகின்றது.

விஷேடமாக கிராம சேவையாளரின் நற்சான்று பகுதி உதவி அரசாங்க அதிபரால் மேலொப்பமிடப்பட்டு பாஸ்போட் விண்ணப்பத்துடன் சமர்பிக்குமாறு வேண்டுகின்றனர்.

மற்றைய இனங்களுக்கு அப்படிக் கேட்பதில்லை. இது ஓர் பாரபட்சமான செயல் என தமிழ் மக்கள் மனம் குமுறுகின்றனர்.

இப் போது கிராமசேவையாளரின் நற்சான்றுப் படிவங்கள் முடிந்து விட்டமையால் தமிழ் விண்ணப்பதாரிகள் மேலும் அவஸ்தைப் படுகின்றனர்.

எனவே சம்பந்தப் பட்ட அமைச்சரும் திணைக்களமும் இவ்விடயத்தில் எல்லோரையும் சமமாக மதித்து நீதியுடன் செயல்பட வேண்டும் என வேண்டுகின்றேன்.

**அ.பி.இ.குமார்**
பலாலி தெற்கு
வசாவிளான்

### இன்று சந்நிதி 4-ம் திருவிழா

# செல்வச்சந்நிதியான்

செல்வச் சந்நிதியான் காண் செவ்வேள் காண்
சேர்ந்தார்க் கென்றும் செவ்வியான் காண்
வல்வைத் தொண்டைமானாறு வதிபவன் காண்
வல்வினைகள் தீர்ப்பவன்காண் வடிவேலன் காண்
எல்லைக் கெவருமில்லா ஏரகத்தான் காண்
ஏவர்க்கு மினியவன்காண் ஏழைபங்காளன் காண்
தொல்லைமிகு துன்பங்கள் தொலைப்பவன் காண்
தோகைமயில் வாகனன்காண் தொகையில் அன்ன
மளிப்பவன் காணே

அன்னக்கந்தன் காண் அறுமுகமானவன் காண்
ஆறிருதடந்தோளன் காண் எமை ஆள்பவன் காண்
மன்னவர்க்கு மன்னவன் காண் மாதிருவர் பங்கன் காண்
மஞ்ஞைமேல் வருபவன் காண் மணிமகுடன் காண்
வன்னமயில் வாகனன் காண் வயலூரான் காண்
வறுமைதனை அறுப்பவன் கா வண்மையன் காண்
மன்னு மொரு தொண்டைமா னாற்றை
மருவினாற் காண்
மயூரன் காண் மனோன்மணி மைந்தன்தானே

பூவரசின் கீழமர்ந்த புனிதன்தான் காண்
புங்கவர்கள் போற்றுகின்ற புரவலன் காண்
மாவரசின் கிளைசாயாமல் மாவடியில் வைகினான் காண்
மனுக்குலத்தைக் காக்கவந்த மறைநான்கு
மானான் காண்
தேவரசின் சேனைதன்னை தெய்வீகமணங்
கொண்டவன் காண்
தேவாதி தேவர்க்கும் தேவன் காண்
தெவிட்டாத தேனவன் காண்
மூவரசின் முடிகொண்டான் காண்
முகுந்தனுக்கு மருகன் காண்
முடிவிலாதுறையும் செல்வச் சந்நிதியான் காணே

முருகவே. பரமநாதன்

பாராளுமன்றத்தில் கடந்தவாரம் — இ. கந்தசாமி

# கூட்டணியினரை கைதுசெய்து சிறைவைக்க வேண்டுமாம்!

கடந்த வியாழன் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான பாராளுமன்ற அமர்வு மறுநாள் அதிகாலை வரை இரவிரவாக நீண்டதொரு மரதன் ஓட்டத்தை ஒடி 12 மணித்தியாலங்களின் பின் தூக்கக் கலக்கத்துடன் நிறைவெய்தியது.

அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு ஆறு ஆண்டு காலத்தில் 9-வது தடவையாக திருத்தப்பட்ட திருத்தம்.

தேர்தல் சட்டத்திருத்தம்—

மாதாந்த நாடகமான அவசரகால நீடிப்பு பிரேரணை —

இவையே அன்றைய அமர்வில் எடுக்கப்பட்ட விடயங்கள்.

இம்மூன்று விடயங்களையும் அவசரமாக நிறைவேற்ற வேண்டி சபையின் நிரந்தர விதிகள் தளர்த்தப்பட்ட நிலையில் சாமம் சாமமாக விவாதம் நடைபெற்றது

சபைகூடி சில வழமையான பணிகள் முடிந்ததும் —

அரசியலமைப்பின் 9-வது திருத்தப்பிரேரணை தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை பிரதி சபாநாயகர் வாசித்ததை அடுத்து அன்று விவாதத்திற்கு எடுக்கப்பட இருந்த பிரேரணைகள் முன் வைக்கப்பட்ட வேளை எழுந்த பதில் எதிர்க்கட்சித்தலைவர் மைத்திரி, தேர்தல் திருத்தச் சட்டமூலத்தின் பிரதி இன்று சபைக்கு வந்தபின்னர் தான் தமக்குக் கிடைத்தது என்றும் எனவே அதனைப் படித்து விவாதத்துக்கு தயாராக வருவதற்கு வசதியாக அவ் விவாதத்தை இன்னுமொருதிகதிக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சிறிது ஆவேசத்துடன் எழுந்த பிரதமர் —

பதில் எதிர்க்கட்சித்தலைவர் பொய் கூறுகிறார். தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருவது குறித்து ஆராய்ந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அவரும் அங்கம் வகித்திருக்கிறார். அந்த அறிக்கை கடந்த 7-ம் திகதி நகல் சட்டமூலத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை அந்த சட்ட மூலத்தைப் படித்து விட்டு விவாதத்துக்குத் தயாராக எதிர்க்கட்சியினர் வந்திருக்கலாம் எனவே இச்சட்ட மூல விவாதத்தை இன்னுமொரு திகதிக்கு ஒத்திவைக்க முடியாது.

மைத்திரியின் கோரிக்கைக்கான தமது மறுப்புக்கு சுமார் ஒருமணித்தியாலமாக விளக்கமளித்த பிரதமர் தேநீர் இடைவேளை குறுக்கிட்ட வேளை தமது மறுப்புக்கு ஆதாரமாகப் பல தஸ்தாவேஜுகளையும் சேகரித்து வந்து வாதிட்டார்.

நகல் சட்டத்திற்கும் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அசல் சட்ட மூலத்திற்கும் முரண்பாடு உண்டு என்பதும் மைத்திரியின் வாதம் —

ஒத்திவைப்புக்கு அனுமதி கிடைக்காத நிலையில் மாலை 5-20 மணியளவில் ஆரம்பமான விவாதம் நடுநிசி 12 மணிக்கு 10 நிமிடங்கள் முன்னதாக முடிவடைந்து, 122பேர் ஆதரவாகவும் 7 பேர் எதிராகவும் வாக்களித்ததுடன் நிறைவேறியது.

எதிர்கட்சிகள் சார்பில் அனில் முனசிங்கா சமர்பித்த திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டன.

இந்த நீண்ட விவாதத்தில் எதிர்க்கட்சியினர்மீதும் கடந்த ஆட்சினர் மீதும் அரசு தரப்பினரும் அரசு தரப்புமீது எதிர்க்கட்சியினரும் தாராளமாக கண்டனக்கணைகளை சரமாரியாக வீசியதையே குறிப்பாக அவதானிக்க முடிந்தது.

அனுரா வெளிநாடு சென்றிருந்தமையினால் பதில் எதிர்க்கட்சித்தலைவராக இருந்த மைத்திரி விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். சரத், லக்ஷ்மன் ஆகியோரும் எதிர்க்கட்சி வரிசையில் இல்லை.

தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் ஒரு முயற்சி —''

மைத்திரி ஆற்றிய குறுகிய உரையின் முக்கிய வாதம் இது.

மத்துகம அனில் இவ்வாறு கூறுகிறார். —

''தேர்தலை ஒத்திவைப்பதற்காக உலகில் எந்த ஒரு நாடும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவில்லை. அவ்வாறு கடந்த ஆண்டு அரசு நடத்திய சர்வசன வாக்கெடுப்பில் இலங்கையின் வரலாற்றில் இடம்பெறாத மோசடிகளும் அநீதிகளும் இடம் பெற்றுள்ள,

தேர்தலை ஒத்திவைத்ததன் பலனை 83 ஜூலையில் அனுபவித்துவிட்டோம்,

### தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணையாளருக்கு இச்சட்டத்தினால் அதிக அதிகாரம் வழங்குவதைவிடுத்து சகல கட்சிகளும் அங்கம் வகிக்கும் தேர்தல் ஆணைக்குழு ஒன்றை அமைத்தால் பெரிதும் நன்மை கிட்டும்.

இடையில் பிரதமருக்கும் அனிலுக்கும் சிறுவிவாதம்—

அனில்: இந்த நாட்டில் 25 வீத ஜனநாயகமாவது இருக்கும் வரை தேர்தலில் போட்டியிடுவேன்.

பிரதமர்: எதிர்வரும் இடைத் தேர்தலை சுதந்திரக்கட்சி எதிர்த்தால்..?

அனில்: தேர்தலுக்காக கட்சிக்குள்இருந்து போராடுவேன்.

பிரதமர்: நல்லது நீர் ஒரு ஒரு சிறந்த ஜனநாயக வாதிதான்,

நீண்டநேரம் உரையாற்றிய அனிலிடம் நேரம் போகிறதே என அரச தரப்பு உறுப்பினர் ஒருவர் நினைவூட்ட அனில் பின்வருமாறு கூறுகிறார்—

இந்த நாட்டின் ஜனநாயகம் அழிந்துகொண்டு போகிற வேளையில் நாம் சில மணிநேரம் நித்திரை விழித்தால் என்ன?

தென்பகுதி மக்களின் நிலை குறித்து கொத்மலை எம். பி.க்கு பெரும் கவலை பின்வருமாறு கவலையை வெளிப்படுத்துகிறார்—

அவரது கூற்றைப் பார்ப்போம்—

''பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்துக்கொண்டு கூட வடக்கு கிழக்கில் உள்ள பயங்கரவாதிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க முடியாதிருக்கிறது. சிங்கள மக்களுக்கு எதிராக அது பயன்படுத்தப் படுகிறது. அரசுக்கு முதுகெலும்பு இல்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு பயந்து நடுங்குகிறது. தெற்கில் உள்ள சிங்கள மக்கள் இந்தியா செல்லமுடியாது. அரசுக்கு எதிராக சுவரொட்டி ஒட்டமுடியாது. அரசுக்கு எதிராகப் பேசமுடியாது. ஆனால் வடக்கில் உள்ளவர்கள் எதுவும் செய்யலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை சிறையில்போட்டு தண்டனைவழங்குமாறும் அவர் அரசுக்கு ஆலோசனை வழங்கினார்.

## ஒரே இரத்தம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களை விடுங்கள் அதை ஐ.நா. பேசிப்பார்த்துக் கொள்ளட்டும் எப்படி உயிர் வாழ்வது? என்பது தான் இப்போது இங்குள்ள பலரது கேள்வியாக இருக்கிறது. ''உயிர், உடமைகள் பாதுகாப்புக்கான உத்தரவாதம் வேண்டும்'' என தலைவர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள் யார் செவியில் ஏறப்போகிறது?

தமிழ்ப் பகுதிகளின் வறட்சியின் அன்றாட பற்றாக் குறைகளுடன் இப்போது அச் சமூகம் பல புதிய அவலங்களும் சேர்ந்து கொண்டு மக்களை வாட்டி எடுக்கின்றன.

இலங்கையில் தமிழினம் சிரித்துப் பலநாட்கள் யார் முகம்பார்த்தாலும் அச்சத்தின் நிழல்!

இதற்கிடையே ஜூலைக் கலவர அகதிகள்முகாம்களை விரைவில் மூடிவிடநடவடிக்கைஎடுப்பதாகவும் செய்திகள் வெளியாகின்றன. ஆஸ்பத்திரிகளை அவசரப்பட்டு மூடிவிடுவதால் நோய்களெல்லாம் ஒரேயடியாக மாறிப்போகும் என்று எண்ணமுடியுமா?

இந்தப்புனித மண்ணில் இன்னமும் இரத்தம் வீணாக ஓடிக்கொண்டிராது தடுக்க,நிதான சிந்தனையுடைய மனச்சாட்சியுடைய உண்மைத் தலைவர்கள் உடன் முன்வர வேண்டும். இது இன்றைய அவசரத் தேவை. ''ஆனவரை சொல்லி விட்டேன் அழுதழுது சொல்லிவிட்டேன்''

.கணேஷ்-

## ஓரிடத்தில் தரித்து...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களிலும் குடியேறியுள்ளார்கள்.

இம்மக்கள் தங்களது எதிர்காலத்தைப் பொறுத்தமட்டில் ஒருமித்த கருத்தினைக்கொண்டவர்களாக இல்லை. மாறுபட்ட கருத்தினைக் கொண்டவர்களாகவே உள்ளார்கள். இக்கருத்துக்கள் யாவும் இந்நாட்டில் நடந்துமுடிந்த - நடந்து கொண்டிருக்கிற கசப்பான நிகழ்வுகளினால் ஏற்பட்ட விரக்திகளாகவே உள்ளன. அதே நேரத்தில் இம்மக்களின் தேசிய நலனைப் பாதுகாக்கக் கூடிய தேசிய தலைமை ஒன்று உருவாகாத நிலையினையும் தெளிவுபடுத்துகின்றது.

எதுவாயினும் இவர்களது எதிர்காலத்தினைப் பற்றிய சரியானதோர் கொள்கைத் திட்டம் அவசியமாகிறது இந்தக் கொள்கைத் திட்டம் உறுதியானதாகவும், இம்மக்களது வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் தலைமைச் சக்தியாகவும் அமையவேண்டும். இதில் தான் மொத்த மலையகத் தமிழ் மக்களது பூரணத்துவம் தங்கியுள்ளது.

இந்தியா சென்றடைவதினை எண்ணக் கருத்தாகக்கொண்டவர்களை ''இந்தியாவுக்குச் செல்லுங்கள்; அல்லது செல்ல வேண்டாம்'' என்ற வாதத்தினை எப்படி எடுத்துரைப்பது? இந்தியா செல்லுவதற்கான எண்ணம் வலுவடையக் காரணம் தேசிய இன அடக்குமுறைதான் என்றால்; இந்தியாவில் அந்தத் தேசிய இன அடக்குமுறை இல்லையா? யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் (புத்திஜீவிகள் அல்லாதோர்)மட்டத்தில் மலையகத் தமிழ் மக்களை இரண்டாந்தரமாக நோக்குவது உண்மையெனில் இந்தியாவில் இம்மக்களை ''கண்டியர்கள்'' என அழைத்து மட்டம் தட்டவில்லையா? இதனைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மேலும், இந்தியா செல்வதென்பது சாதாரண ஒன்றல்ல. இது சட்டப் பிரச்னை சம்பந்தப்பட்டது. அதேநேரத்தில் இந்தியா செல்லுவது பற்றிய இந்திய அரசின் முடிவும் கவனத்தில் கொள்ளத்தக்கது அதாவது ஜூலைக்கலவரத்தைத் தொடர்ந்து இந்திய அரசு விட்ட அறிக்கை வருமாறு;

''இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மக்கள் இந்தியா திரும்பிட எண்ணுவது அவர்களது சுய உணர்வு சம்பந்தப்பட்ட விடயமல்ல. இலங்கை அரசின் சமகால நிலப்பாடே இதற்குக் காரணம். இந்த நிலைமைக்குகீழ் இம்மக்களை இந்தியாவுக்கு திருப்பி எடுத்துக்கொள்ளும் திட்டம் இந்திய அரசிடம் இல்லை'' என்பதாகும். மேலும் இந்தியாவிற்குச் செல்லும் எண்ணக் கருத்தினைக்கொண்ட இம்மக்கள் உணரவேண்டியதொன்று. இந்தியாவானது தேசிய விடுதலை பெற்றுவிட்ட ஒரு நாடு என்பதைவிட அது பொருளாதார ரீதியில் விடுதலை பெற்ற ஒரு நாடா?

### இணைப்பே அன்றி ஆக்கிரமிப்பு அல்ல

குடியெயரும் மலையகத் தமிழ்மக்களைப் பொறுத்தமட்டில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் பிரதேசங்களிலேயே குடியேறி வருகின்றார்கள். இக்குடியேற்றங்களை பொறுத்த மட்டில் புத்திஜீவிகள் மட்டத்தில் வரவேற்கப்படும் நிகழ்ச்சியாகவும், சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் நில ஆக்கிரமிப்பு நிகழ்ச்சியாகவும் பார்க்கப்படுவது இப்பிரதேச சமூக ஆய்வின் மூலம் காணமுடிகின்றது. மலையகத் தமிழ் மக்களது குடியேற்றமானது நிச்சயமாக ஒரு நில ஆககிரமிப்பாக இருக்க முடியாது. மொழி கலாச்சார அடிப்படை உறவில் ஒன்றுபட்ட ஒரு இனம் புவியியல், கல்வி, பொருளாதாரம் போன்ற சமூக அமைப்பு முறைகளால் தொடர்பற்று இருந்த வரலாறே மலையக யாழ்ப்பாணத் தமிழ் மக்களது கடந்த கால நிலைப்பாடாகும். தவிர்க்கமுடியாத நிலையில் துண்டிக்கப்பட்ட இந்த நிலை இன்று ஓரினம் என்ற ரீதியில் மீண்டும் இணைவதினை எப்படி ஒரு நில ஆக்கிரமிப்பு எனக் கூறமுடியும்?

## ஊர் வாய்

நக்கீரர்

மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர் ஒருவர் சுவையான ஒரு விஷயத்தை எமக்குத் தெரிவித்தார் கடந்த புதன் இந்தப் பகுதியிலே வெளியான இலஞ்ச வழக்கை வாசித்த பின் தனக்கு இது ஞாபகத்திற்கு வந்ததாம். அவரே கூறுகிறார் கேளுங்கள்.

தென் மாகாணத்தில் பல வருடங்களுக்கு முன் நான் ஓர் அரசினர் வைத்தியசாலையிலே கடமையாற்றிக் கொண்டிருந்தேன் பிள்ளைப் பேறுக்காக அங்குவரும் பெண்கள் இலஞ்சம் கொடுக்கும் முறை புதுமையானது நேரடியாகக் கொடுக்க மாட்டார்கள் மருத்துவச்சியை ஒரு களவு செய்யத் தூண்டுவார்கள். வைத்தியசாலைக்கு வரும் கர்ப்பிணி தனது மடியிலே ஏதோ பொட்டலம்போல ஒன்றைக் கட்டி வைத்திருப்பாள். மருத்துவச்சிக்கு இது தனக்குக்கொண்டு வந்த பணம் என்பதுதெரியும். அவள் கர்ப்பிணியை மிகவும் ஊக்கத்துடன் கவனிப்பாள். குழந்தை பிறந்த பின்பு மடியிலே இருக்கும் முடிச்சை தானகவே அவிழ்த்து பணத்தை எடுத்துக்கொள்வாள். ஒரு முறை கர்ப்பிணியின் மடியிலே முடிச்சு பெரிதாக இருந்தது. மருத்துவச்சிக்கு உச்சி குளிர்ந்தது. தடபுடலாக ஓடித்திரிந்து பெண்ணைக் கவனித்தாள். கர்ப்பிணி கொஞ்சம் முனகினலே என்னிடம் ஓடிவந்துவிடுவாள். அவளருகே நின்று ஒழுங்காக எல்லாம் செய்தாள். உண்மையிலே ஒரு மருத்துவச்சி தனது தொழிலை எப்படிச் செய்ய வேணடுமோ அப்படிச் செய்தாள். பிள்ளையும் சுகமாகப் பிறந்தது. அழகான ஆண் குழந்தை. 'உங்களைப்போன்ற நல்ல மனமுள்ளவருக்கு ஏற்ற பரிசு அம்மா' என்றாள் அவள் தாயிடம். மேலும் பொறுத்திருக்க அவளால் முடியவில்லை. மடியிலே இருந்த முடிச்சை அவிழ்த்து எடுத்தாள். தென் கடலோரத்திலே பொறுக்கி எடுக்கப்பட்ட அழகான கற்கள் முடிச்சிலே காணப்பட்டன.

இந்த நிகழ்ச்சி எமது பிரதேசத்திலே நடந்த ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்துகிறது. ஒரு கிழவன் வாழ்நாள் முழுக்கச் சேர்த்துவைத்த சொத்தில் பங்கு எடுப்பதற்காக கிழவிகள் அவரின் சடலத்தைச் சுற்றி ஒப்பாரி வைக்கிறார்கள். கிழவன் வழக்கமாகப் படுக்கும் அறையிலே ஒரு பெரிய உமலிலே ஏதோ கட்டப்பட்டிருக்கிறது. மனிதன் ஒருகாலமும் அந்த உமல் உள்ளே இருப்பதை ஒருவருக்காவது காட்டவில்லை. பொன்னும் வெள்ளியும் என்றுதான் கதை அடிபட்டது. உரிமைக்காரர்கள் பங்கு கொள்ளவேண்டியதுதான் பாக்கி எவ்வளவுக்கெவ்வளவு உரிமை கூடியதோ அவ்வளவுக்குக் கவ்வளவு பங்கின் வீகிதம் கூடும். உரிமை எவ்வளவு கூடியது என்பதை ஒப்பாரியின் போது மார்புகள வாங்கும் அடிகளிலிருந்து கணித்துக் கொள்ளலாம். மார்பு நோத் தாங்க முடியாமல் ஒரு கிழவி இரகசியமாக கிழவனின் உமலிருந்த அறைக்குப்போய் உமலிலே ஒரு துவாரம் செய்து பார்த்தாள். உமல் நிறைய கிழவன் வாழ்நாள் பூரா சேமித்து வைத்த கடற்சிற்பிகள் இருப்பதைக் கண்டாள். இந்த விஷயத்தை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு. எனவே அவள் மீண்டும் அந்தப் பெண்களுடன் சேர்ந்து விஷயத்தை ஒப்பாரி மூலம் தெரிவித்தாள். 'அக்கையெடி வெறும் சிப்பியெடி, ஆய்ஞ் சோய்ஞ்சு அடியுங்கடியி.'' என்று பாடல் வந்தது.


மலிவு விலையில்

HONDA மோட்டார் சைக்கிள்

H—100—18,500/-

மேற்படி விலைக்குறைப்பு

கையிருப்பு முடியும் வரை மட்டுமே

CANTABIA LTD.,

21, MAIN STREET. JAFFNA.

T'Phone: 24201

## "இன்றைய சமுதாயத்திற்கு

# சமய அறிவும், ஆத்மீக உணர்வும் அவசியம்"

## —யாழ். மாநகர ஆணையாளர்

(வண்ணார்பண்ணை)

''இன்றைய மனித சமுதாயத்திற்கு சமய அறிவும், ஆத்மீக உணர்வுகளும் மிகமிக முக்கியமானதாகின்றது. தெய்வ நம்பிக்கையும், இறைவழிபாடும் உள்ளமனிதனுல் தான் சீரான வாழ்க்கை வாழமுடியும் இதற்கு சமய அறிவு மிக அத்தியாவசியமாகின்றது.'

நல்லூரில் சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு வைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி.வீ.கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகரசபையினுல் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் முதல் மூன்று இடங்களுக்கும் தங்கப்பதககங்கள் வழங்கப்பட்டன.

மொத்தம் 12 பரிசில்கள் வழங்கப்பட்டன. யாழ். மாநகரசபை ஆணையாளர் இப்பரிசில்களை வழங்கினுர்.

ஆணையாளர் திரு சிவஞானம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: யாழ்ப்பாண மாநகர சபை கடந்த இருபத்தைந்து வருடங்களாக நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டிகளை நடத்தி வருகின்றது. இவ்வருடம் இப்போட்டி வெள்ளி விழாவாக இடம்பெறுகிறது. ஆனுல் கடந்த காலங்களை விட இம்முறை இப்போட்டிகளில் பங்குபற்றியவர்களின் தொகை மிகக் குறைவ க இருப்பது மிகவும் கவலைக்குரியதாகின்றது.

கூடுதலான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்ட போதும் போட்டியில் மிகக் குறைவானவர்களேபங்கு பற்றியுள்ளனர். இப்படியான போட்டிகளில் பங்குபற்றுவதன்மூலம் எமது சமய அறிவை நாம் விரிவடையச் செய்ய முடியும்.

இச்சம அறிவுப் போட்டியின் மத்தியஸ்தர் குழுத் தலைவராக பணியாற்றிய ஆசிரியர் திரு க.சொக்கலிங்கம் இவ்வைபவத்தில் சிறப்புரையாற்றுகையில், நல்லூர்க் கந்தன் உற்சவகாலத்தில் இவ்வாலய சுற்றுடலை புனிதமாகவும், சுத்தமாகவும் வைத்து புறச்சுத்தத்தை ஏற்படுத்திவரும் யாழ். மாநகர சபை, 25 வருடங்களாக அகச்சுத்தத்தையும் மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில்சமய அறிவுப்போட்டியையும் நடத்தி வந்திருக்கின்றது என்றும் இன்றைய ஆணையாளர் பக்தி சிரத்தையுடன் இப்பணிகளைச் செய்து வந்தமை சைவமக்களின் நன்மதிப்பை மாநகர சபைக்கு ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினுர்.

இப்போட்டியில் செல்வன் இ.குகனேந்தன் முதலாம் பரிசையும், செல்வன் த,கிரீஷன் இரண்டாம் பரிசையும், திருமதி சந்திரேகா சிவகுமாரன் மூன்ரும் பரிசையும் பெற்றனர்.

இவர்களுக்கான மூன்று தங்கப்பதக்கங்களையும், முறையே யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு மு.ஆலாலசுந்தரம் சிவதர்ம வள்ளல் திரு க.கனகராசா 'ஏ.கே.எஸ்' திரு சிவநேசன் ஆகியோர் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

# விசேட சேவை அலுவலர்க்கு சிங்கள தேர்ச்சியில் விதிவிலக்கு!

## அமைச்சர்கள் இராசு, தொண்டமான் உறுதி

(சித்தன்கேணி)

தமிழ்பேசும் விசேட சேவை அலுவலர்களுக்கு சிங்களத் தேர்ச்சியில் இருந்து விதி விலக்களிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர்கள் செ.இராசதுரையும், எஸ் .தொண்டமானும் உறுதியளித்துள்ளனர்.

அண்மையில் தமிழ்பேசும் விசேட சேவை அலுவலர் கழக குழு ஒன்று பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரையையும், கிராமிய அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமானையும் அமைச்சுக்களின் அலுவலகங்களில் சந்தித்து இது குறித்து பேச்சு நடத்தினர்.

அண்மையில் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளரினுல் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டசிங்களம் எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தால் மட்டுமே நிரந்தரமாக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி சிங்களத் தேர்ச்சியில் இருந்து விதிவிலக்களிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கைவிடுத்ததன்பேரில் அமைச்சர்கள் இருவரும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

## யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள்

# நடைமுறைக் கணக்குகளை ஆரம்பிக்க முடியாது!

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்திலுள்ள சன சமூக நிலையங்கள் ஒவ்வொன்றும் தங்கள் நிலையத்தின் பெயரில் சேமிப்புக் கணக்கு ஒன்றை மட்டுமே வங்கியில் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

நடைமுறைக் கணக்குகளை ஆரம்பிப்பது தடுக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான பணிப்புரையொன்றை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் சுற்றுநிருபம் மூலம் விடுத்துள்ளார்.

இச்சுற்றுநிருபங்கள் மாநகர சபை ஆணையாளர், நகர சபைச் செயலாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உபஅலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பிரஸ்தாப சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''சில சனசமூகநிலையங்கள் வங்கிகளில் நடைமுறைக் கணக்குகளை ஆரம்பித்துக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வருவதைக் கண்டுபிடித்துள்ளோம். எனவே அவ்வாறு ஒரு நடைமுறைக்கணக்கைச் சனசமூக நிலையங்கள் வங்கிகளில் அமுல்படுத்துவது உடனடியாகத்தடை செய்யப்பட வேண்டும். இவ்விடயமாக முழுக்கவனத்தையும்செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்

''இந்த நடைமுறைக் கணக்குகளை வைத்திருக்கும் சன சமூக நிலையங்களைப் பற்றியும் அவற்றின் நடைமுறைக் கணக்கு இலக்கங்கள் பற்றியும் உடனடியாக எனக்கு அறிவிக்கப்பட வேண்டும். சனசமூக நிலையங்கள் இந்த நடைமுறைக் கணக்குகளைச் சேமிப்பு கணக்காகமாற்றுவதில் எமக்கு எதுவிதஆட்சேபனையும் இல்லை சனசமூக நிலையங்கள் வங்கியில் சேமிப்புக்கணக்கை ஆரம்பிக்கும் போது எனது அங்கீகாரம் பெறப்பட வேண்டும்'' என்று இச்சுற்று நிருபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தின் பிரதிகள் யாழ்.மாவட்ட இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர், யாழ்.மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம்- 'கோட்டை ரயில் நிலையம் (தமிழ்)
5-35 'கிரேட்ஸ் பேஸ்கோஸ்ரர்' (ஆங்கிலம்)
6-00 'விஞ்ஞான நிகழ்ச்சி' (சிங்களம்)
6-30 தேகாரோக்கிய நிகழ்ச்சி (சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 சீன ஓவியர்களின் பேட்டியும், செயல் முறை விளக்கமும் (ஆங்கிலம்)
7-45 விவரணச் சித்திரம் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-45 'தீஹறா' திரைப்படம் (உருது)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

## வானொலி இன்று

காலை

5-30 நாதாஞ்சலி
6-35 தோத்திரமாலை- விநாயகர் கவசம்- ரி. எம். சௌந்தரராஜன்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
7-00 பாட்டு- விஜயகுமாரி இராமநாதபிள்ளை
7-30 மாகாணச் செய்திகள்
7-35 இசையமுதம்
8-05 வாத்தியவிருந்து
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலைஒலிபரப்பு முடிவு

மாலை

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 அருளமுதம்
6-30 குன்றின்குரல்
7-00 களத்துமேடு
7-15 நாடகம்- இது ஒரு தொடர்கதை எழுதியவர் எஸ். நடராஜன்
7-30 உலகச் செய்திகள்
7-40 நாட்டுப்பாடல்
7-50 மர்ஹூம் என். எச். எம். அப்துல்காதர் நினைவுதினப் பேச்சு
8-00 முஸ்லிம் நிகழ்ச்சி
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள்
9-30 கலைக்கோலம்
10-00 தாளவாத்தியக் கச்சேரி ரி. பாக்கிய நாதன்
10-30 குரல்வகை
11-00 ஒலிபரப்பு முடிவு

# சடலம் மயானத்தில் எரிய குடிசையும் தீப்பற்றியது!

(கிளிநொச்சி)

நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட இளம் பெண் ஒருவரின் உடல் தீயுடன் சங்கமாகிய அதேவேளை அப்பெண் வசித்து வந்த குடிசையையும் விசமிகள் தீயிட்டு கொழுத்தி நாசம் செய்ததாக கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மரணமான இராசகோபால் செல்வராணிஎன்பவரின் வீடே தீயிட்டு கொழுத்தப்பட்டது. உருத்திரபுரம் சந்தைக்கருகில் இவ்வீடு உள்ளது.

காணித்தகராறு காரணமாக இப்பெண் நஞ்சருந்தி மரணமாகியதாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது மரணமான பெண்ணின் சகோதரரானத. தவராசாவேபொலிசில் புகாரைத் தெரிவித்துள்ளார்.

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாத்மா காந்தி ரேட்,
(சலுசலவுக்கு அனமையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்:- 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ.1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்.- 21652, 21742 21918 21931, PERIMR CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

# இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—13(29-08-1984)
வாரம்—புதன்
திதி—திருதியை முன்னிரவு 6-48வரை
நக்ஷத்திரம்—அத்தம் பின் இரவு 3-07வரை

மேடம்:- வாழ்க்கையின்று மல்லிகைத்தோட்டம் போல் மணம் பரப்பிக்கொண்டிருக்கும் காதல் சிட்டுகளுக்கு இன்று கவர்ச்சிகரமானதினம்.

இடபம்:. பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கும் சிலர் புண்ணியஸ்தல யாத்திரையை மேற்கொள்ளுவார்.

மிதுனம்:- வியாபாரத் துறைகளில் ஈடுபடுபவர்கள் இன்று அதிகமுதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம்.

கடகம்:- மந்த நிலையில் வாழ்க்கை சிலரைப்பாதிக்கச் செய்யும் சிலவிஷமிகளிடம் பெண்கள் அகப்படநேரிடும் உறவுமுறைகளில் தடைஏற்படும்.

சிங்கம்:- கடந்தகால நினைவுகளால் இன்பக்கடலில்மூழ்குவீர்கள் இதயத்தில் அமைதி நிலவும் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும்.

கன்னி:- எதிர்பார்த்த முடிவுகள் ஏமாற்றத்தைத் தரும் எதிரிகளின் சூழ்ச்சிபலமாக அமையும் நினைவுகள் தலைதூக்கும் நிதானபுத்திநன்று.

துலாம்:- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானதினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு தாய் வழி உறவு நீடிக்கலாம் வாசன நலனுக்குமிடமுண்டு.

விருச்சிகம்:- எதிலும் முன்னணியில் நிற்பீர்கள் பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும்சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்.

தனுசு:- பகைமூட்டம் வட்டமிடும் வீணுனவார்த்தைகளால் மனம்புண்படும் தொழில்துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும் மனத்திடம் நன்று.

மகரம்:- மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம் முதியவர் ஒருவரின் உதவி உங்கள் நல்வழியை உருவாக்கும் அறிவுப்பசிக்கு தாராளமாக விருந்து உண்டு.

கும்பம்:- தொழில்புரியுமிடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும் இதன்மூலம் பொருள் விரயமாகும் மேலதிகாரிகளின் தண்டனைக்கு ஆளாகுவீர்கள்.

மீனம்;- இறைவழிபாடு பேலிடும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் பிதாவழிமூலம் நல்லசெய்தியும் கிடைக்கும் கல்வியில் பிள்ளைகளின் முன்னேற்றமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## யாருடையது?

திரு. செல்லையா குமாரகுருபரர் என்பவருடைய 441 717ம் இலக்கச் சாரதி லைசென்ஸை திருமதி திருவிளங்கம் சேனதிராசாவும், புலோலி தெற்கைச் சேர்ந்த திரு.மாணிக்கம் தெய்வேந்திரனின் அடையாள அட்டையை திரு. என். தயாபரனும், குருநகர் புதுவீதி செல்வன் சந்திரசேகரம் பாலா என்பவரின் அட்டையை திரு. ச. தவசீலனும் கோண்டாவிலைச் சேர்ந்த திரு. ஏ. மனோகரன் பணத்துடன் கூடிய பேர்ஸினையும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## "கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"

(சாவகச்சேரி

''கல்வியும்அறிவும் நம்மைக் காப்பாற்ற மாட்டாது கடவுள் தான் நம்மைக்காப்பாற்ற வேண்டும். இறைவனுக்கும் அவனிலிருந்து பிரிந்து உண்டான பொருள்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தே வருகிறது அதுவே இறை பற்று அந்த இயற்கை வேகத்தை புறக்கணித்தோமேயானல் மனோவியாதி வந்து சேரும்,,

இவ்வாறுநல்லூர் தேர்த்திருவிழாவையொட்டி நயினையிலிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழுவினர் புங்குடுதீவு தென் பெருதுறை சதானந்த சுவாமிகள் சமாதி சிவன் ஆலயத்தில்நடை பெற்றஓமகுண்ட பூசையில் கலந்து கொண்ட போது பாதயாத்திரைக்கு தலைமை வகித்த தவத்திரு மநமசிவாயம் தேசிகர் கூறினர்

ஓமகுண்ட பூசையை முடித்துக் கொண்டு பாதயாத்திரை குழுவினர் மண்கும்பான் வேலணை பண்ணை வழியாக நல்லூர் கந்தன் ஆலயம் வந்துதமதுபாதயாத்திரையை முடித்துக் கொண்டனர்.

## சுதுமலை குளம் துப்பரவானது!

(கோண்டாவில்)

சுதுமலை அம்மன் கோவிலுக்கு முன்பு உள்ள குளம் இந்து இளைஞர் மன்றத்தினல் துப்பரவு செய்யப்பட்டு ஆழமாக்கப்படுகிறது. சிரமதானப் பணிமூலம் இம் முயற்சியில் சுமார் ஐம்பது இளைஞர்களுக்கு மேல் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மழை காலங்களின் போது இக் குளம் தூர்ந்த நிலையில் காணப்பட்டமையால் இதனை சுற்றியுள்ள வீதிகள் வெள்ளம் தேங்கி நின்றதுடன் பல குடும்பங்கள் குடியெழும்பின என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறைக்கு இடமாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த 5 வருடங்களாக இயங்கி வந்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய அலுவலகம் அம்பாறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## "நற்பண்புகளை வளர்க்க..."

(புலோலி)

''இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களிடம் ஒற்றுமை, பொறுப்புணர்ச்சி, சகிப்புத்தன்மை, வெற்றி தோல்வியைச் சமமாகக் கணித்தல் போன்ற நற்பண்புகளை வளர்க்க முடியும்- ஒரு நாடு கல்வித்துறையில் மாத்திரமன்றி விளையாட்டுத்துறையிலும் முன்னேறும் போது தான் அபிவிருத்தியடைய முடியும் நாட்டின் அபிவிருத்திக்கு தேகாரோக்கியம்மிக்கச் சமுதாயம்.இன்றியமையாதது.

இவ்வாறு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுத்துறை அபிவிருத்திக் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு, வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார். கூட்டம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீ அற்புத நந்தன விநாயகர்ஆலய சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது பகல் அன்னதானமும் வழங்கப்படும்.

## சாட்டி சிந்தாத்திரை மாதா உற்சவம்

(வேலணை)

வேலணை' சாட்டி சிந்தாத்திரைஅன்னைமாதா வருடாந்த திருவிழா அடுத்த மாதம் 15ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24ம் திகதி திருநாட்திருப்பலியுடன் நிறைவு பெறும்.

திருப்பயணிகள் அனைவரும் சிந்தாத்திரை அன்னையின் அருள் பெற்று மன நிறைவுற்றுச் செல்வதற்கு வசதியாக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பங்குத் தந்தைவணபிதா.றெஜீஸ் ராசநாயகம் தெரிவித்தார்.

## புதிய நிர்வாகிகள்

(சித்தன்கேணி)

அண்மையில் புனரமைப்புச் செய்யபப்பட்ட பொன்னலை மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:

தலைவர் செல்வி நல்லையா தேவகல்யாணி துணைத்தலைவர் செல்வி வேலுப்பிள்ளை வேல்விழி பொதுச்செயலாளர் செல்வி செல்லையா தேவராணி துணைச்செயலாளர் செல்வி குமாரவேலு நகுலாம்பிகை பொருளாளர் திருமதி ச. சந்திராசா.

இவற்றுடன் ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**என் தம்பி**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமலஹாசன்-சுஜாதா
**உயர்ந்தவர்கள்**

**சாந்தி** [யாழ் நகர்]
10-30, 2-30, 4-45, 700
BILLION
DOLLAR THREAT
action packed

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்.-லதா
நம்பியார்
**பல்லாண்டு வாழ்க**
(புத்தம் புதிய பிரதி-கலர்)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
**உத்தரவின்றி உள்ளே வா**

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
**மனோகரா**
(புதிய பிரதி)

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6-30
Rex Harrison..
Darmendra..
Zeenath Aman..
in
SHALIMAR
Action-Packed-
English Movie

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-00, 4-30
Gold Runner
Action—Thrill


**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
**யாருக்காக அழுதான்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30. 6-30
ஜெமினி-சரோஜாதேவி
நாகேஷ்
**தாமரைநெஞ்சம்**
[புதிய பிரதி]

**உஷா!!! குளிர்சாதனப் பெட்டி**
முற்பணம்: Rs. 2700/- மாதாமாதம்: Rs. 290/-
(5 வருட உத்தரவாதம்)
**த பிரைன்ஸ் கம்பனி லிமிட்டெட்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

3-வது மாத நினைவஞ்சலி

M. R.
மணிவண்ணன்



பிறப்பு: 11-03-1962

இறப்பு: 29-05-1984

அம்மா என்று ஓடோடி வந்த உன்னை
அன்பு தந்து அரவணைத்து வளர்த்தாளே - நீ
அப்பா என அழைத்தபோது அவர்பிரிவை காட்டாது
அறிவு என்ற அன்னம் ஊட்டி வளர்த்தாளே
துணையின்றி துயில் கொள்ள மறுத்த-உன்னைதம்பியின்
துணையுடன் துயில்கொள்ள வைத்தாளே -
தலைமகனும்
உன்னை கலைமகள் துணையுடன் பார்புகழ வைத்தாளே
திரைகடல்ஓடி திரவியம் தேட சென்றுயே
- மணிவண்ணு
திரவியமான உன்னை இழந்து திக்கற்று நிற்கும் எமக்கு
உன்போல் அன்புமொழிகூற யார் உளர்
- இப்பாரினில்
உன்பிரிவால் வாடுகின்றோம் அழுகின்றோம், புரள்
கின்றோம் - உன்
வதன முகம் கண்டு எம் துயர் களைந்த நாம்
— இனி எங்கு
செல்வோம் - உன் வதனமுகம் காண - சொல்
மணிவண்ணு!
மானிடர் நாம் பூவுலகில் புகுந்தபோதே -
நிச்சயிக்கப்பட்டதொன்று
மரணம். மாந்தர்நாம் மரணமதை மறந்துவிட்டு
பாவமதில்
மண்டியிட்டு வாழ்கின்றோம். இறையடி
எய்திட்ட மணிவண்ணு
எமக்காய் விண்ணுலக இறைவனை வேண்டுவாயாக!
அண்ணு என அழைத்தபோது அருகில் வந்து
அன்புடன்
அரவணைத்த என்னை - வேதனை என்னும் துயரக்கடலில்
ஆழ்த்திவிட்டு இறைவன் திருவடி எய்திட்டாயே-தம்பி
உன்பிரிவு என்னும் துயர் என்றும் ஆறுது தம்பி - உன்
பிரிவால் வாடும் உன் அண்ணன் விக்னு!
அன்புடன் நினைவு கூறும் அண்ணு

C. C. விக்னராஜ்,

77/3, வாசல வீதி.
கொழும்பு-13. 1467

மணமக்களுக்கு
**எங்கள் வாழ்த்துக்கள்**

இன்று திருமணம் நிகழவிருக்கும்

| மணமகன் | | மணமகள் |
|---|---|---|
| அ அலெக்சாந்தர் | — | மேரிதிரேசா |
| ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி | — | ஞானலக்ஷ்மி |

ஆகியோர்

தமிழும் மணமும் போல இனிதே
வாழ்ந்திட வாழ்த்துகிறேம்,

பளை மகா வித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
அபிவிருத்திச்சபையினர் [1481]

## பிஸ்கால் ஏலவிற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. MS/4708

இராசையா தவநாதன்
காங்கேசன்துறை வீதி, சுன்னுகம்

வழக்காளி

எதிர்

[1] புட்டர் தங்கவேலுவும் பெண்
[2] உருத்திராதேவியும்
கடைவைப்புலம், சுன்னுகம்

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் காசு/சு/4708 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் (19-9-1984) பத்தொன்பதாம் திகதி புதன்கிழமை மு. பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ஐந்து (5) பவுண் எடையுள்ள தங்கவளையல் அல்லது ரூபா 10000/-மும் (பத்தாயிரம்) வழக்கு அணைத்த திகதியில் இருந்து இறுக்கும்வரை 12% வட்டியும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னுகம் இறை ''தில்லகலட்டி'' நில பர (2) இரண்டு இதில் வடக்குப்புறமாக நில பரப்பு ஒன்று (1) இதில் வடமேற்குப்புறமாக குடியிருக்கும் நிலம் நீக்கி மிகுதி நிலமும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கு தாமோதரம்பிள்ளை இராசரத்தினத்தின் ஆதனம் வடக்கு பொன்னையா அருந்தவதேவியின் ஆதனம் மேற்கு வரதராசா பெண் மீனலோசனியின் ஆதனம் தெற்கு சிதம்பரப்பிள்ளை மார்க்கண்டுவுக்கு உரிய ஆதனமும் ஒழுங்கையும் இதடங்கலும் மேலும் தெற்கெல்லைக்காணிக்குரிய கிணற்றுப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் புறநீங்கல்.

உறுதி இலக்கம் 9599/9-4-79 வி. கதிரவேலு பிரசித்த நொத்தாரிஸ்.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பிஸ்கால்

மாவட்ட மன்றம்
மல்லாகம். 24-8-1984. 1477

# "இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வேண்டும்"

## யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''இந்நாட்டிலுள்ள இனப் பிரச்சினைக்கு சகல பகுதி மக்களும்ஏற்கக்கூடிய நியாயமான தீர்வுஒன்றை எவ்வித தாமதமுமின்றி உடனடியாகக் காண வேண்டும் என்று ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நேற்று நடந்த யாழ். சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது

யாழ். சட்ட நூலகத்தில், யாழ்.சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு எஸ். ஆர் கனகநாயகம் தலைமையில் நேற்று நண்பகல் நடந்த இக்கூட்டத்தில் 45 சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்

### கண்டனம்

மல்லாகம் பதில் நீதிபதி ஜி வி. பாலசிங்கம், சட்டத்தரணி எஸ். பாலகிருஷ்ணன், மற்றும் அச்சுவேலி வாசிகளின் சொத்துக்களும், வீடுகளும் அழிக்கப்பட்டதையும், மன்னார், வவுனியா, வல்வெட்டித்துறை, கரவெட்டி, கைதடி பகுதிகளில் உயிர்கள் பறிக்கப்பட்டதுடன், பாரிய அழிவு ஏற்படுத்தப்பட்டதையும் சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்துளளது.

இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்றும், உயிரிழப்பு, பொருள் சேதத்திற்கு நியாயமான நஷ்டஈடு வழங்குவதுடன் இச்செயல்களுக்குக் காரணமாக உள்ள அனைவருக்கும் தண்டனை வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

சங்கத்தலைவரையும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களையும், மேற்படி சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும், பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடனும், தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் சொத்துக்களை இழந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கவும் மனித உரிமைகள் மீறப்படுவதை நிவர்த்தி செய்யவும், நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பதென்றும் சங்கம் தீர்மானித்துள்ளது.

அடிப்படை மனிதஉரிமைகள் மீறப்படுவதையும், அப்பாவி மக்களுக்கு பாதுகாப்பும், சொத்துக்களின் பாதுகாபபும், பாதுகாப்புப்படையினரால் அத்துமிறப்படுவதை மிகுந்த கவலையுடன் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவது என்றும் பாதிக்கப்பட்டா அனைவருக்கும் உரிய நிவாரணம் அளிக்கப்படுவதுடன் மக்களின் பொருட்களுக்கும் உயிர்களுக்குப் பாதுகாப்பு அளித்து, பாதுகாப்புப்படையினரின் பொறுப்பற்ற செயல்களை உடன்நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் காலியிலுள்ள பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்களையும், மற்றும் சிறைகளிலுள்ள அப்பாவி மக்களையும் உடன் விடுதலை செய்யவேண்டுமென்றும் ஜனாதிபதியைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானங்களை ஆதரித்து யாழ் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் திரு. இராஜராஜேஸ்வரன் தங்கரசசா, சட்டத்தரணிகள் இராஜா விஸ்வநாதன், எஸ். கே. மகேந்திரன், ஆர். பாலசுப்பிரமணியம், ஆர். தவராசா, சாதா லோகேஸ்வரன், எம். கே. சுப்பிரமணியம், எஸ். கோடீஸ்வரன், இ. செல்லத்துரை ஆகியோரும் பேசினார்கள். [க]

## மரண அறிவித்தல்

### திரு. க. பொன்னம்பலம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவரும், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியருமான திரு க பொன்னம்பலம் காலமானார். இவர் புளோருவின அன்புக்கணவரும், Dr. வசந்தவேணி [கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்] இளங்கோவன் [பொறியியலாளர், அமெரிக்கா] இராகவன் [உடுவில் மகளிர் கல்லூரி] இரவிமன்னன், நந்தன் [பேராதனைப்பல்கலைக் கழகம்] இலகுபரன், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும். Dr. J. எலியேசர் [கொழும்புப் பல்கலைக் கழகம்] Dr. சுகேந்திரிணி [அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மமனரும், ரபிந்தா. அஞ்சா தயான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன் கிழமை (29-8-84) மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, இளங்காட்டு மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். 1488

## மரண அறிவித்தல்

### திருமதி. இராமலிங்கம் இராசம்மா

திருமதி இராமலிங்கம் இராசம்மா காலமானார். இவர் காலம்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், அருணாசலம், காலம்சென்ற சிவசுப்பிரமணியம், காலம்சென்ற திருநாவுக்கரசு, முத்துக்குமாரசாமி, திருமதி வாலாம்பிகை கணேசரட்ணம் ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. க. கந்தசாமியின் மாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் 38, ஸ்ரான்லிவீதியில் உள்ள இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று (29-8-84) மாலை 4-00 மணிக்கு வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

1492

## விசாரணையின் பின் விடுதலை

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் சைக்கிளில் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த மாணவரொருவர் ஆயுதப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு, விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்

இம்மாணவன் கைது செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட நிலை குறித்து மாணவனது பெற்ருேர், வடமாநிலக் கல்விப் பணிப்பாளருக்கு முறையிட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் சைக்கிளில் தனிமையிற் சென்ற மாணவன் கந்தர்மடம்சந்தியில் வைத்துக்கைது செய்யப்பட்டு, பின்னர் முகாம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் சமார் 6 மணித்தியாலங்கள் விசாரணை செய்யப்பட்ட பின்னர் சைக்கிளும், புத்தகங்களும் ஒப்படைக்கப்பட்டு 2-30 க்கு விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இது சம்பந்தமாக வடபகுதி பாதுகாப்பு இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு, நிலைமையை விளக்குவதாகக் கல்விப் பணிப்பாளர் மாணவனின் பெற்ருேரிடம் தெரிவித்தார்.

### பல்கலைக்கழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

கடந்த 10ம் திகதி உடுவிலில் உள்ள வீட்டில் வைத்து ஆதயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட மாணவனை விடுதலை செய்யுமாறு, யாழ், பல்கலைக்கழக நிர்வாகமும் மானியக்குழுவும் உயர்கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியிருந்தது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் அவரை விடுதலை செய்யுமாறு கோரிக்கைவிடுத்திருந்தனர்.

நேற்று முன் தினம் 27ம் திகதி குருநகர் முகாமில் வைத்து அவர் விடுதலை செய்யப்பட்டதாகப் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார். (மா)

### பார்த்தசாரதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னைக்குச்சமாதானத்தீர்வொன்றைக் காண இந்திய அரசாங்கமும், இந்தியப் பிரதமரும், ஏனையநாடுகள் மூலம் வற்புறுத்தி வருவதாகவும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் சர்வகட்சி மகாநாட்டிலிருந்து கூட்டணி வெளியேறுதல் தமது முயற்சியை வீணாக்கிவிடுமென்று இந்திய அரசாங்கமும், இந்தியப் பிரதமரும் கருதுவதாக திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு பார்த்தசாரதி மூலம் இந்திரா காந்தியுடன் தொடர்பு கொண்டு தான் முழு முயற்சி எடுத்ததாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்

சர்வகட்சி மகாநாட்டில் கூட்டணியைக் கலந்து கொள்ளுமாறு திரு. பார்த்தசாரதி வற்புறுத்தியதாகவும் அவர் கூறினுர்.

கூட்டணி இம்மகாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சமாதானத்தீர்வுகாணுவதிலிருந்து இலங்கை அரசு நழுவிவிட வாய்ப்பு ஏற்படலாமென்று இந்தியத் தலைவர்கள் கருதுகிருர்களென்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினுர்

(இ-வெ)

# அச்சுவேலி தபால் நிலையத்தில் வேலைகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தபால் நிலையம் பாதிக்கப்பட்டுள்ளதால்தபால் அலுவல்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கட்டிடத்தின் உட்பகுதிகள், தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் உட்பட தபால்நிலைய அதிபரின் வாசஸ்தலம் ஆகியன பலத்த சேதமடைந்துள்ளன.

கடந்த 25-ம் திகதி அச்சுவேலியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களின்போது நான்கு வீடுகள் தீவைக்கப்பட்டதுடன் தபால் நிலையமும் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

தன்னியக்கத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையமும் உடைக்கப்பட்டதால்இ பகுதியில் உள்ள 30 தொலைபேசிக் கருவிகளும் செயலிழந்துள்ளதாக, வடமாகாண பதில் தொலைத் தொடர்புப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையத்தைத் திருத்தம் செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பழுதடைந்த உதிரிப்பாகங்களுக்குப் பதிலாக, கொழும்பிலிருந்தே புதிதாக நிலைய உபகரணங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதி தபால் அத்தியட்சகர் திரு. வை. அருளானந்தமும், வடபிராந்திய தொலைத் தொடர்புப் பொறியியலாளர் திரு எஸ். மகேஸ்வரனும் நேற்று பாதிக்கப்பட்ட தபால் நிலையத்தைப் பார்வையிட்டனர். [மா]

### பொலிஸ் ஜீப்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பொலிஸ் நிலையத்துக்கு தெரிவிக்கப்பட்டதும் பொலிசார் தீவிரதேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

ஜீப் கடத்தப்பட்டு குண்டு வைத்து தகர்க்கப்பட்டது குறித்து பொலிசாரும், ஆயுதப்படையினரும் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.

## 2 வதுசபைபற்றி ஆராய்வர்

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டின் பிரதிநிதிகள் குழுத்தலைவர்கள் இன்று கூடி 2 வதுசபை பற்றிஆராயவுள்ளனர்.

இலங்கைத் தமிழர்பிரச்னைக்குத்தீர்வு காணுமுகமாக ஜனாதிபதி திரு. ஜெ. ஆர். ஜெயவர்த்தன இரண்டாவது சபையொன்றை நிறுவவிருப்பது தெரிந்ததே.

இன்று நடக்கும் சர்வகட்சி மகாநாட்டில் தமிழ்க் காங்கிரஸ் கலந்து கொள்ளாது.

### இலங்கையுடனை-

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுமென்றும் இப்பத்திரிகை கேட்டுள்ளது.

வடபகுதியிலுள்ள தமிழ் சிறுபான்மை மக்களால் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையை ஒடுக்குவதற்கு இஸ்ரேலிய இரகசிய உளவுப்பிரிவின் உதவியை இலங்கை நாடியிருப்பதை அரபு நாடுகள் கண்டித்துள்ளன.

### மக்கள்வங்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவருவதாகவும் மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புக் காரணமாக நகைகளை தற்போது உரியவர்களிடம் வழங்குவது சாத்தியமில்லையென்றும், மாற்று ஏற்பாடு செய்வதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவருவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## கிரிக்கெட் டெஸ்ட்: வெற்றி தோல்வி இல்லை

லண்டன், ஆக. 28

இலங்கைக்கும் இங்கிலாந்திற்குமிடையே லண்டன் 'லோட்ஸ்' மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட்டெஸ்ட் போட்டிவெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

### ரூபா 29,000...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கி முனையில் கொள்ளை அடித்தது தெரிந்ததே. (மா)

### விடுதலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

நேற்று விடுதலையாகி வந்தவர்களுடன் சேர்த்தால் 183 இளைஞர்கள் இதுவரை விடுதலையாகிஇருக்கிருர்கள் என்று வல்வெட்டித்துறைபிரஜைகள் குழுவினர்தெரிவித்துள்ளனர்

''வல்வெட்டித்துறையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 500 இளைஞர்களில் (வெளியிடங்கள் உட்பட) 327 பேர் காலி இராணுவ முகாமில் வைத்திருப்பதாக பட்டியலொன்று முன்னர் யாழ் மாவட்ட பதில்செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. எம். பஞ்சலிங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மீதி 127 இளைஞர்களும் எந்த முகாமில் வைக்கப்பட்டிருக்கிருர்கள் என்று அறிவிக்கப்படவில்லை. அவர்கள் எங்கே என்று மேற்படி பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் 4ம் திகதி மேற்குறிப்பிட்ட 500 இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டபோதிலும், 8ம் திகதி பருத்தித்துறையிலும் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களும் கலந்தே விடுதலை செய்யப்பட்டு வருவதாகவும் பிரஜைகள் குழு தெரிவித்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி. நாகமுத்து

கோப்பாய் தெற்கு பழம் தெருவைச்சேர்ந்த திமதி. நாகமுத்து காலமகிவிட்டார். இவர் சின்னையாவின் அன்பு மனைவியும், கொழும்பு ''நல்லூர் ரேடர்ஸ்'' பங்காளர்களும், ''ஞானவேல்'' ரான்ஸ்போட் உரிமையாளர்களுமாகிய அழகானந்தம், அற்புதமூர்த்தி, பாலசுப்பிரமணியம், கிருஷ்ணபிள்ளை, கமலாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசநாயகம் (அபு-தாபி), புஷ்பராணி, கமலாம்பிகை, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-8-1984 இன்று புதன்கிழமை மாலை 2-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 1493

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.